# செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் அண்ணாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

செஞ்சி, செப்.18-
பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாள் விழா தமிழகம் முழுதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர தி.மு.க. சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் உள்ளபேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கும், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திரு உருவப்படத்திற்கும் நகர செயலாளர்கார்த்திக் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர் .இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்.பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் , தொமுச நிர்வாகிகள்உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.




ஈரோடு வடக்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கோபியில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு நடைபெற இருக்கிற சட்டமன்றத் தேர்தலில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். மேலும் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை

# தி.மு.க. மகளிர் அணி - தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை,செப்.18-
தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமுக வலைத்தள குழு, ஆலோசனைக்குழு நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்.

கழகத்துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக் குமார் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர் ஜெயராம் மஹால். 20/09/2024 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:

1கழக ஆக்க பணிகள்.

2.2026 சட்டமன்றத் தேர்தலில் மகளிரணி பங்களிப்பு.

3.மகளிரணி உறுப்பினர் சேர்த்தல். இவ்வாறு ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிரணிச்செயலாளர். நாமக்கல் ப. இராணி, மாநில மகளிர் தொண்டரணிச்செயலாளர் அறிக்கை விடுத்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உயர்க்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக்கிணங்க மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து வணங்கி இனிப்புகளை வழங்கினார் . சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் ஆர்.சிவா, டாக்டர் இரா.லட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு. தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி செல்வராஜ், மாநில மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர நிர்வாகிகள் என்.என்.இளங்கோ, வி.புருசோத்தமன், ஒன்றிய செயலாளர் க.மும்மூர்த்தி, பி தெய்வசிகாமணி, தே முருகவேல், கல்பட்டு வி.ராஜா, ஜெய.ரவிதுரை, வி.ஜிபிரபாகரன், ஜெ.ஜெயபால், ஆர்.பி.முருகன், வே.கணேசன், கு.செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் பஞ்சநான், டி.என்.ஜெ.சம்பத், தொமுச வி.சேகர், வாலிபால் மணி, இளைஞர் அணி செ.தினகரன், தொண்டர் அணி கபாலி , மாணவர் அணி ரீ வினோத், வழக்கறிஞர் அணி சுவை.சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு , வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நீலகிரி காந்தல்ராஜ்**
**செப்டம்பர் 18 (1981)**



**நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நெருக்கடி நிலையை எதிர்த்து மிசா கைதியாக இருந்தவர்.**

**இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து நடைபெற்ற மறியலில் பங்கேற்று சிறையிலிருந்தபோது மரணமடைந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


